# பள்ளிக்குச் செல்லத் தயாராகுதல்

**குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் பள்ளிக்குச் செல்ல ஆரம்பிப்பது பெரியதொரு மாற்றமாகும். புதிய நபர்கள், இடங்கள், பழக்கங்கள் ஆகியவற்றோடு பரிட்சயம் கொள்வது சுவாரசியமானதும் – சவாலானதாகவும் இருக்கும். உங்கள் குழந்தை பள்ளிக்குச் செல்வதில் நல்லதொரு தொடக்கத்தைத் தர நீங்கள் நிறைய உதவமுடியும்.**

## பள்ளிக்கான ஒரு நல்ல தொடக்கம் எது?

குடும்பங்களும் பராமரிப்பாளர்களும் அவர்களது குழந்தைக்கான முதல் ஆசிரியர்கள். வீட்டில் உங்கள் குழந்தையுடன் நீங்கள் செய்யும் விசயங்கள் அவர்கள் கற்றுக்கொள்வதிலும் வளர்ச்சியிலும் உதவுவதுடன் அவர்களைப் பள்ளிக்குச் செல்லவும் தயார் செய்கிறது. உங்கள் குழந்தையின் கற்றலிலும் வளர்ச்சியிலும் உதவுவதற்கான சிறந்த வழி **விளையாட்டுதான்**.

பள்ளியில் நல்லதொரு தொடக்கம் அமைவது அவர்கள் நன்றாகக் கற்கவும் மகிழ்ச்சியாக உணரவும் வைக்கிறது. பள்ளியில் குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, அவர்கள் தொடர்ந்து கற்க விரும்புகிறார்கள். உங்கள் குழந்தையின் பள்ளிக்கூடம், உங்கள் குழந்தையின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தேவைப்பட்டால் கூடுதல் உதவியுடன் கடுமையாகப் பணிபுரிகிறது. பள்ளியில் உங்கள் குழந்தை நிலைப்படுத்திக் கொள்வதிலும், பத்திரமாகவும், நம்பிக்கையாகவும் இணைந்திருக்கவும் உதவக்கூடிய விசயங்களையும் நீங்கள் செய்யலாம்.

## வீட்டில் விளையாட்டு வழியாகக் கற்றல்

உங்கள் குழந்தை கற்பதற்கு உதவக்கூடிய சிறந்த வழி விளையாட்டு. விளையாடுவதால் எண்ணுதல், வரிசைப்படுத்தல், தொகுத்தல், அளவிடுதல் போன்ற கணிதத்துக்குத் தேவையான திறன்கள் வளர்கின்றன. விளையாட்டு இயற்கையையும் அறிவியலையும் உங்கள் குழந்தை கண்டறிய உதவுவதுடன் அவர்களை படைப்பூக்கம் கொண்டவர்களாக ஆக்குகிறது. உங்கள் குழந்தை விளையாடும்போது, உணர்ச்சிகளை அறிந்துகொள்வதுடன் தங்கள் மொழி, எழுத்தறிவுத் திறனையும் வளர்த்துக் கொள்கிறார்கள். வீட்டில் நீங்கள் செய்யக்கூடிய சில விசயங்கள் இதோ:

- **தினசரி நடவடிக்கைகள்:** அன்றாட நடவடிக்கைகளான சமையல், மேசையில் உணவு பரிமாறுதல், உணவு மேசையைச் சுத்தம் செய்தல், அலசுவதற்கான துணிகளை வரிசைப்படுத்துதல், துணிகளையும் பொம்மைகளையும் ஒதுங்க வைத்தல், தாவரங்களையும் செல்லப்பிராணிகளையும் கவனித்துக் கொள்ளுதல் போன்றவை மூலம் உங்கள் குழந்தை கற்றுக் கொள்கிறது. '*நமக்கு எத்தனை கப் மாவுத் தேவைப்படும்?* அல்லது '*பொருந்தக்கூடிய காலுறைகளை உன்னால்*

*கண்டுபிடிக்க முடியுமா?* போன்ற கேள்விகளைக் கேட்பதன் மூலம் உங்கள் குழந்தைக்கு கற்க உதவலாம்.

- **விளையாட்டுக்கள்:** UNO, Snap, Memory, கண்ணாமூச்சி, கள்ளன்-போலீஸ் போன்ற எளிய விளையாட்டுக்களை ஆடுவதால் உங்கள் குழந்தை தங்களுக்கான முறைகள் குறித்து கற்க உதவுகிறது.
- **கட்டுமானங்களைச் செய்துபார்த்தல்:** LEGO, மரக் கட்டைகள் அல்லது அட்டைப்பெட்டிகளை வைத்துக் கட்டுமானங்களை உருவாக்குவது விசைப்பொறித் திறன்களை வளர்ப்பதுடன் உங்கள் குழந்தை படைப்பூக்கத்துடன் சிக்கல்களைத் தீர்க்கவும் உதவுகிறது.
- **சித்திரங்களும் கைவினைப் பொருட்களும்**: படம் வரைவதும் கைவினைப் பொருள் செய்து பார்ப்பதும் படைப்பூக்கத்தை வளர்த்து விசைப்பொறித் திறனையும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்களையும் உருவாக்குகிறது.
- **உடை உடுத்துதல்**: பழைய துணிகளில் உடை உடுத்துவதும் வேறொரு பாத்திரமாக பாவனை செய்வதும் அவர்களது படைப்பூக்கத்தையும் மொழித் திறன்களையும் வளர்க்கிறது.
- **இசை, கதைகள், நடனம்:** படிப்பது, கதைகள் சொல்வது, இசை கேட்பதும் அதற்கேற்ப நடனமாடுவதும், வீட்டில் அல்லது தோட்டத்தில் உள்ள பொருட்களைக் கண்டறிய ‘புதையல் வேட்டை’ நடத்துவது போன்றவை உங்கள் குழந்தையின் மொழித்திறன்களை வளர்க்கும்.
- **வெளியே விளையாடுவது:** நடப்பது, ஏறுவது, ஈருளியில் செல்வது, மைதானத்துக்குச் செல்வது, செல்லப்பிராணிகள் வீட்டைக் கட்டுவது, பந்தை வீசிப் பிடிப்பது, ஒரு டென்னிஸ் பந்தாட்ட மட்டை அல்லது மென்மையான கிரிக்கெட் மட்டையினால் மென்மையான பந்துகளை அடிப்பது, மண் சேற்றில் விளையாடுவது - இவையனைத்தும் உங்கள் குழந்தை கற்கவும் வளரவும் உதவுகிறது.
- **விசாரித்து கேள்வி கேளுங்கள்:** உங்கள் குழந்தை விளையாடும்போது, *'உன்னால் இதை விளக்கமுடியுமா...?*, *'இப்படி நடந்தால் என்னாகும்...?*, *'அந்தக் கேள்விக்கு எப்படிப் பதிலளிப்பாய்...?'* போன்ற கேள்விகளைக் கேளுங்கள்
- **வழக்கங்கள்:** ஒவ்வொரு நாளும் அதே வேளையில் விசயங்களைச் செய்வதால் உங்கள் குழந்தைக்கு என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவும் அவர்கள் உணர்ச்சிகளைக் கையாளவும் உதவுகிறது. குழந்தைகள் பள்ளிக்கூடத்தை எதிர்கொள்வதற்கு தினசரி பழக்கவழக்கங்கள் உதவுகின்றன. குறிப்பாகப் படுக்கை நேர நியமத்தைக் கடைப்பிடிப்பது முக்கியம். உதாரணமாக: இரவுணவு, குளியல், இரவு உடை அணிதல், பல்துலக்குதல், புத்தகங்கள் வாசித்தல் பின்னர் படுக்கைக்குச் செல்லுதல்.

## பள்ளிக்கூடத்தைப் பழகிய இடமாக ஆக்குதல்

பள்ளிக்கூடத்துக்குத் தயாராகுதல் கல்விசார் கற்றல் குறித்த ஒன்றல்ல. ஆனால், பள்ளியானது எப்படியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளவும் நேர்மறையான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கவுமே ஆகும். உங்கள் குழந்தைக்கு உதவுவதில் நீங்கள் செய்யக்கூடிய சில விசயங்கள் இதோ:

- உங்கள் குழந்தையின் பாலர்பள்ளி வழங்கும் எந்தவொரு பள்ளிச்சூழலுக்கு ஏற்ற நிலைமாற்றத் திட்டங்களில் கலந்துகொள்ளுதல்.
- பள்ளிக்குச் செல்லவும் அங்கிருந்து வரவும் பயிலுதல்.
- அதே பள்ளிக்குச் செல்லும் வேறு குழந்தைகளுடன் உங்கள் குழந்தையை விளையாட விடுங்கள்.
- எப்படி உடையணிவது, கழிப்பறைக்குச் செல்வது, கைகளைக் கழுவுவது, சன்ஸ்கிரீன் தடவிக்கொள்வது, தங்களது பள்ளிப் பையைத் தயார் செய்து தூக்கிச் செல்வது ஆகியவற்றைக் கற்றுத் தந்து தங்கள் வேலைகளைத் தாங்களே செய்ய ஊக்குவியுங்கள்.
- பள்ளி செல்லத் தொடங்குவது குறித்துப் பேசுதல். பள்ளிக்கூடம் குறித்து உங்கள் குழந்தை உற்சாகமடையச் செய்யுங்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய கவலைகள் குறித்துப் பேசுங்கள்.
- பள்ளி செல்லத் தொடங்குதல் குறித்த புத்தகங்களைப் படியுங்கள் அல்லது கதைகளைச் சொல்லுங்கள்.
- பள்ளி சென்று வந்தபின் என்ன நடக்கும் என்பது குறித்துப் பேசுங்கள்; பயிற்சி செய்யுங்கள்.
- பள்ளி தொடங்கும், முடியும் நேரங்களைச் சரிபார்த்து விட்டு கூட்டிச்செல்லவும் கூட்டிவரவும் தயாராகுங்கள். அதேபோல உங்கள் குழந்தையை எங்கு விடவேண்டும், எங்கிருந்து கூட்டிச் செல்ல வேண்டும் என்று தெரிந்துகொள்ளுங்கள்.
- முடிந்தால் ஆசிரியரின் பெயரைப் பயன்படுத்தத் தொடங்குங்கள்.

## உங்கள் குழந்தையின் பாலர்பள்ளி எப்படி உதவுகிறது

பாலர்பள்ளியும் உங்கள் குழந்தை பள்ளிக்குச் செல்லத் தயாராகுவதில் உதவுகிறது. பாலர்பள்ளியில் மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடுவதாலும் வேலை செய்வதாலும் குழந்தைகள் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் நண்பர்களைப் பெறவும் செய்கிறது.

உங்கள் குழந்தையின் பாலர்பள்ளி ஆசிரியர் **கற்றல் மேம்பாட்டில் மாற்றுகைக்கான அறிக்கை (மாற்றுகை அறிக்கை)** எழுதுவதன் மூலம் அவர்கள் பாலர்பள்ளியிலிருந்து பள்ளிக்கு மாறுதலாக உதவுகிறார். உங்கள் குழந்தையின் எதிர்காலப் பள்ளிக்கென மாற்றுகை அறிக்கை தரப்படுகிறது. இதில் உங்கள் குழந்தையின் திறன்கள், பலங்கள், ஆர்வங்கள், எந்தவிதத்தில் அவர்கள் சிறப்பாகக் கற்றுக் கொள்கிறார்கள் போன்றவை விவரிக்கப்பட்டிருக்கும். உங்கள் குழந்தையின் மாற்றுகை அறிக்கையை

நிரப்பும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். உங்கள் குழந்தையும் தங்களது எண்ணங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்துகொள்ளும்படி கேட்கப்படலாம்.

மாற்றுகை அறிக்கை குறித்தக் கூடுதல் விபரங்களுக்கு தயவுசெய்து இத்துறையின் இணையதளத்துக்கு வருகை தாருங்கள் (கீழே காண்க).

## மேலும் அறிக

- பள்ளி செல்லத் தொடங்குதல் உதவிக் குறிப்புகள் (education.vic.gov.au)
- பாலர்பள்ளியிலிருந்து பள்ளிக்கு மாறுதல் (education.vic.gov.au)
- ஒரு பள்ளியைத் தேர்வுசெய்வதும் சேருவதும் எப்படி (education.vic.gov.au)
- பள்ளி செல்லத் தொடங்குதல்: உங்கள் குழந்தையைத் தயார் செய்தல் | குழந்தை வலைத்தொடர்பை அதிகரித்தல்
- பள்ளி செல்வதில் ஓர் ஆரோக்கியமான தொடக்கம் - Better Health சேனல்
- பள்ளி மாற்றுகையில் குடும்பங்களுக்கான வள ஆதாரங்கள் (education.vic.gov.au)